**001/DM/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

குறிப்பு :

**1.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**2.** வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

**3.** கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியை – தமிழாக்கம் செய்க. (10)

Letter writing is an art, this can be perfected through constant practice, we write letters to keep in touch with friends and relatives and to carry important information. Letters are a form of conversation, because they involve personal and direct communications between to people. So every educated person should know how to write a clear and readable letter.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. கூட்டுறவே – நாட்டுயர்வு.

3. ஊனமுற்றோர் மறுவாழ்வு.

4. ஈட்டிய விடுப்பு நாட்கள் ஒப்படைப்பு செய்து, ஊதியம்பெற துறைத்தலைவருக்குக் கடிதம் வரைக. (10)

**[Turn over**

## பகுதி — II

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ்க் கவிஞர். இந்திய சுதந்திர போராட்டக் காலத்தில் கனல் தெறிக்கும் விடுதலைப் போர் கவிதைகள் வாயிலாக மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல், ஒரு எழுத்தாளர், பத்திரிக்கை ஆசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களின் மனதில் தட்டி எழுப்பியவர். தம் தாய் மொழி மீது பற்றுடையவர். அதனால் தேசிய கவிஞராகப் போற்றப்பட்டவர்.

இவர் 11.12.1882-ல் எட்டயப்புரத்தில் சின்னசாமி ஐயருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இளம் வயதிலேயே கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் “பாரதி” என்ற பட்டம் வழங்கினார். 11.9.1921-ல் 39-ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

வினாக்கள் :

(அ) பாரதியார் விடுதலை உணர்வை எதன் மூலம் மக்களுக்கு ஊட்டினார்.

(ஆ) பாரதியார் கவிஞர் மட்டும் இல்லாமல் செய்த பிற பணிகள் யாது?

(இ) பாரதியார் எவ்வாறு மக்களால் போற்றப்பட்டார்?

(ஈ) பாரதியார் எங்கு, எப்போது, யாருக்கு மகனாய் பிறந்தார்?

(உ) இவருக்கு “பாரதி” என்ற பட்டம் யாரால் வழங்கப்பட்டது?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5)

மருத்துவமனையில்

நோயாளி : வணக்கம் மருத்துவர் ஐயா,

மருத்துவர் : வணக்கம் ________________

நோயாளி : எனக்குத் தலைவலியுடன், காய்ச்சல் உள்ளது.

மருத்துவர் : ________________.

நோயாளி : நேற்று இரவிலிருந்து,

மருத்துவர் : அதிகமாக நீர் சத்துள்ள உணவு எடுத்துக் கொள்ளுங்கள்.

நோயாளி : ________________.

மருத்துவர் : காலை, மாலை இருவேளை உணவுக்கு பின் எடுத்துக்கொள்ளவும்.

நோயாளி : ________________.

மருத்துவர் : நன்றி, உடல் நலத்தைப் பார்த்துக் கொள்ளவும்.

## பகுதி — III

மொழிப் பயிற்சி (40 × 1 = 40)

பின்வரும் வினாக்களுக்கு விடையளி :

7. தமிழில் உயிர்க் குறில் எழுத்துக்கள் எத்தனை?

8. 96 – எண்ணை எழுத்தால் எழுதுக.

9. “கனவு” – சொற்றொடரில் அமைத்து எழுதுக.

10. ஐப்பசிக்கு அடுத்த மாதம் எது?

11. ஞாயிறுக்கு முதல் நாள் என்ன கிழமை?

12. விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.
ப, பா, பி, ___, ___, பூ, ___, பே, ___, ___.

13. அகர வரிசைப்படுத்தி எழுதுக.
காலை, கேள், கிளி, கல்வி, கீற்று.

14. Wednesday – கிழமையின் பெயரைத் தமிழில் எழுதுக.

15. நெடில் எழுத்துகளைக் கண்டறிந்து எடுத்தெழுதுக.
"செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்".

உரிய நிறுத்தற் குறியிடுக.

16. ஐயகோ நீதான் அவரோ

17. மாரி மாறிவிட்டது விளைவு தண்ணீர் பற்றாக்குறை

பிழையைத் திருத்தி எழுதுக :

18. நாய் கத்தியது

19. கீதா பாடினான், கண்ணன் வந்தாள்.

விடைக் கேற்ற வினா எழுதுக.

20. முத்தமிழ் வளர்த்தது, பாண்டிய நாடு.

21. மா, பலா, வாழை முக்கனி.

பெயர் சொற்களை எடுத்தெழுதுக.

22. கண்ணன் படித்தான்.

23. சென்னை சிறப்புடையது.

24. குறில், எழுத்துக்கள் கண்டறிந்து எழுதுக.
மரம் ஏறினான்.

25. முதல் எழுத்து மாற்றி புதிய சொல் ஒன்றை எழுதுக.
ஓடினான்.

26. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
மலை மேகங்களைக் கண்டு மையில் ஆடியது.

27. இந்தியாவின் தேசிய விலங்கு எது?

28. இரு பொருள் தருக – திங்கள்.

29. பேச்சு வழக்கு சொல்லை எழுத்து வழக்கு சொல்லாக மாற்றுக – வெத்தலை.

30. பிறமொழிச் சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

சைக்கிள், ஜலம்

சொல்லையும் – பொருளையும் பொருத்துக :

31. அகவை – இல்லம்

32. வீடு – கடினம்

33. செங்கதிர் – வயது

34. அரிது – சூரியன்

35. எதிர்காலச் சொல்லை எடுத்தெழுதுக.

பாடினேன், பாடுவேன், பாடுகிறேன்.

36. பால் வகை அறிந்து எடுத்தெழுதுக.

ஒட்டகங்கள்

37. திணை வகையைச் சுட்டுக : பெண்கள்.

38. கலைச் சொல்லைத் தமிழாக்கம் செய்க : Calculator.

39. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

பறவைகள் ———————— தேடிச் சென்றன. (இரை/இறை)

40. ———————— முழுதும் விளையாட்டு. (மாளை/மாலை)

41. குணம் – இடை எழுத்தை மாற்றிப் புதிய சொல்லை உருவாக்கு.

42. BDS பட்டப்படிப்பு – தமிழில் விரித்தெழுதுக.

43. பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.

நடந்தான், தூங்கினான், சென்றான், ஓடினான்.

44. வினைச் சொல்லை எடுத்து எழுதுக.

(அ) இராமன்

(ஆ) குதிரை

(இ) பாடினான்.

45. பொருந்தமான சொல்லை எழுதுக.

கண்ணன் ———————— (பாடியது/பாடினான்)

46. மலை, மாலை – என்பதன் பொருளை எழுதுக.